**சுருக்கம்**

வணிகவரித்துறை – தமிழ்நாடு வணிகர்நல வாரியம் – கல்வி உதவித்தொகை உறுப்பினர்களின் பிள்ளைகள் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பிற்கு உதவித் தொகையை ரூ.3000/– லிருந்து ரூ.5000/– ஆகவும் தொழிற்கல்விப் படிப்பிற்கு ரூ.3000/–லிருந்து ரூ.10000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை**

**அரசாணை (2டி) எண்.98** **நாள் : 2.07.2007**

**படிக்கப்பட்டது**

தமிழ்நாடு வணிகர்நல வாரிய முதன்மை செயல் அலுவலர் கடித எண். வநவா/203/2007, நாள் 25.04.2007.

**–oOo–**

**ஆணை:**

இதுவரை வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் மகன், மகள் யாரேனும் ஒருவருக்கு ஓராண்டிற்கு மட்டும் கல்லூரி படிப்பிற்கு ரூ.3000/- வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையினை உறுப்பினரின் மகன், மகள் யாரேனும் ஒருவருக்கு ரூ.5000/– ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் என உயர்த்தி வழங்கப்படும் என்றும் மற்ற தொழிற் கல்விக்கு ரூ.10000/– ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் வழங்கப்படும் என்றும் சட்டமன்றப் பேரவையில் 2007–2008ஆம் ஆண்டு வணிகவரிகள் குறித்த மானியக் கோரிக்கையின்போது மாண்வுமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்கண்ட அறிவிப்பு குறித்து வாரிய முதன்மை செயல் அலுவலர் அவர்கள் கீழ்க்கண்டவாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

21.12.1998 அன்று நடைபெற்ற வாரியத்தின் 7–வது கூட்டத்தின் தீர்மான எண்.3–ன்படி கல்வி நிதியுதவி தொகையாக, பட்டப்படிப்பு, பட்ட மேல்படிப்பு மற்றும் தொழில் படிப்பு ஏதேனும் ஒன்றிற்கு ஒருமுறை உதவியாக பொதுவாக ரூ.2000/–ல் இருந்து ரூ.3000/– ஆக உயர்த்தி வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து 31.03.2007 வரை உறுப்பினரின் மகன் / மகள் யாரேனும் ஒருவருக்கு ஓராண்டிற்கு மட்டுமே கல்லூரி படிப்பிற்கு ரூ.3000/– வழங்கப்படுகிறது என்றும் கல்வி நிதி உதவி வழங்கக் கோரும் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலகம் மூலமாக, 1) உறுப்பினர் சான்று, 2) உறுப்பினரின் மகன்/மகள் கல்வி பயிலும் கல்லூரியின் முதல்வரிடமிருந்து கட்டணச் சலுகைகள் ஏதும் பெறவில்லை என்று சான்று 3) இதற்கு முன்பு அவரது குடும்பத்தில் வேறு யாருக்கும் கல்வி நிதியுதவி கோரவில்லை என்ற சான்று 4) அரசிடமிருந்தோ அல்லது வேறு அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களிடமிருந்தோ கட்டணச் சலுகைகள் ஏதும் பெறவில்லை

என்று சான்று 5) விண்ணப்பதாரரின் வருமானச் சான்று (உரிய வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டது) 6) விண்ணப்பதாரர் குடும்பத்தில் தற்போதைய வருமானம், பொருளாதாரம் மற்றும் வறிய நிலை உள்ளவரா (விண்ணப்பதாரரின் வருமானம் குறித்து ஆய்வு செய்யும்போது விண்ணப்பதாரரின் வியாபாரம், பிற வருமானம் போன்றவற்றை கணக்கில் கொண்டு உறுப்பினர் வருமானவரிச் செலுத்தும் அளவிற்கு பொருளாதார நிலை உள்ளவரா) போன்றவைகள் குறித்து வரிவிதிப்பு அலுவலரால் கூர்ந்தாய்வு செய்து வழங்கப்பட்ட சான்று ஆகியவைகளுடன் உரிய வரி விதிப்பு அலுவலர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, தகுந்த பரிந்துரையுடன் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுகிறது என்றும் 13.03.2007 அன்று நடைபெற்ற 10-வது வாரியக் கூட்டத்தில் கல்வி உதவியை உயர்த்தி வழங்குவதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது என்றும் வாரியத்தின் மூலமாக கல்வி நிதியுதவி ஆண்டொன்றுக்கு 20 நபர்களுக்கு (அதாவது நபர் ஒருவருக்கு கல்லூரி படிப்பிற்கு ரூ.5000/- வீதம் 10 நபர்களுக்கு ரூ.50000/-மும், மற்றும் தொழிற்கல்விக்கு ரூ.10000/- வீதம் 10 நபர்களுக்கு ரூ.1,00,000/-மும்) ஆண்டிற்கு உத்தேசமாக ரூ.1.50 இலட்சம் செலவினம் ஏற்படும் என்றும் இச்செலவினை தற்போது வாரிய கணக்கில் உள்ள இருப்புத் தொகையிலிருந்து வாரியத்தின் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி நிதி உதவியினை வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. முதன்மை செயல் அலுவலரின் கருத்தினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, மேலே பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் இவ்வரசாணை வெளியிட்ட தேதிக்குப் பின்னர் பெறப்படும் மனுக்களுக்கு தமிழ்நாடு வணிகர்நல வாரிய உறுப்பினர்களின் மகன் / மகள் யாலேனும் ஒருவருக்கு கல்வி நிதி உதவித் தொகையாக, கல்லூரி படிப்பிற்கு தற்போது ரூ.3000/- வழங்கப்படுவதை ரூ.5000/- ஆக உயர்த்தியும் மற்றும் தொழிற்கல்வி படிப்பிற்கு ரூ.10000/- ஆக உயர்த்தியும் ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் வழங்கிட அரசு ஆணையிடுகிறது. இந்த ஆணை உடனடியாக அமுலுக்கு வருகிறது. இச்செலவினத்தை தமிழ்நாடு வணிகர்நல வாரியம் ஏற்கும்.

4. இது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயல் அலுவலர் தமிழ்நாடு வணிகர்நல வாரியத்தை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். தேவராஜ்,<br>
அரசுச் செயலாளர்.

பெறுநர்<br>
முதன்மை செயல் அலுவலர்,<br>
தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை-5.<br>
வணிகவரி ஆணையர், சென்னை-5.<br>
மாநிலக்கணக்காயர், சென்னை-6/9/18/35.

நகல்<br>
வணிகவரித்துறை அமைச்சரின்<br>
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9<br>
நிதித்துறை, சென்னை-9.<br>
இ.கோ./உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.